# தேர்ந்து தெளிதல்

## செவிமடுத்தலில் இருந்து செயல்

பெரிய குழுவிற்கு திரும்புதல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் ‘‘நாம்’’ என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ‘எளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்.

எடுத்துக்காட்டு:

- தனி நபராக கடவுள் எனக்குக் கொடுத்த திறமைகள், கொடைகளைப் போற்றுவேன்.
- அதிச வாக நமது திறமைகள் கொடைகளைப் பயன்படுத்தி, நம்பிக்கையிலும், பிறருக்குப் பணி செய்வதிலும் வளர ஒருவருக்கொருவர் உறுதிப்படுத்தி ஊக்குவித்தல்

## பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

.......“ஆண்டவரே, உமது அரசைக் கட்டியெழுப்புவதற்காக என் திறமைகளையும் கொடைகளையும் தாராளமாகப் பகிர்ந்து கொள்ள எனக்கு உதவுமாறு மன்றாடுகிறோம்.”

பதிலுரை: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

## நிறைவு இறைவேண்டல்:

விண்ணகத் தந்தையே, எங்கள் ஒவ்வொருவருக்கும் நீர் அன்புடன் அளித்த தனிப்பட்ட திறமைகள், கொடைகளுக்காக நன்றி கூறுகிறோம். இந்த ஆசீர்வாதங்களை நன்றியுணர்வுள்ள இதயங்களுடன் உணர்ந்து, எங்கள் அன்றாட வாழ்வில் அவற்றை உண்மையாகப் பயன்படுத்த எங்களுக்கு உதவிடுவீராக. தாழ்ச்சியோடும், தாராள உள்ளத்துடனும், அன்புடனும் பிறருக்குப் பணி செய்ய எங்களை வழிநடத்துவீராக. நாங்கள் செய்யும் அனைத்திலும் உமது நன்மைத்தனத்தைப் பிரதிபலித்து, இதனால், எங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு நம்பிக்கையை அளிக்க உதவியருளும். ஆமென்.

## முடிவு பாடல்:

இறைவன் அழைக்கின்றார்
இனிய உணவிற்கு
இறைகுலமே நாம்
இணைந்தே சென்றிடுவோம்

1. பன்னிரு சீடர்களை
பந்தியிலே அமர்த்தி
பாதம் கழுவினார் பணிந்து
வாழ்ந்திடவே

2 அப்பத்தைக் கையெடுத்து
அன்புடனே கொடுத்து
இது என் உடல் என்றார்
எல்லாரும் உண்ணுமென்றார்

3. இரசத்தைக் இரத்தம்
எல்லாரும் பருகுவீர் எந்நாளும்
வாழ்ந்திடவே

**Published by:** Peninsular Malaysia Pastoral Team **Email:** api@archkl.org INTERNAL CIRCULATION ONLY

ஜூன் 2026

# அதிசசிந்தனை

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

### மாதாந்திர நோக்கம்:

## திருஅவை - ஒருங்கிணைந்து வாழ்தல்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திய, இன்றைய திருஅவையின் அழைப்பு என்பது ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் தூதுரைத்தல் ஆகியவற்றில் வேரூன்றிய ஒரு திருஅவை வாழ்வியல் முறையான ஒன்றித்தப் பயணத்தின் உணர்வை மீண்டும் கண்டறிந்து அதன்படி வாழ்வதே ஆகும். ஒன்றித்தப் பயணம் சினோடலிட்டி என்பது வெறும் ஒரு செயல்முறையோ அல்லது ஒரு நிகழ்வோ அல்ல; மாறாக தூய ஆவியின் குரலுக்கும் ஒருவருக்கொருவர் செவிசாய்த்து, இறைவனின் மக்களாக ஒன்றாகப் பயணிக்கும் ஒரு வாழ்வின் அனுபவமாகும். பிளவு மற்றும் தனிநபர்வாதத்தால் குறிக்கப்பட்ட இவ்வுலகில், திருஅவையானது ஒற்றுமையின் ஒரு உயிருள்ள சாட்சியாக மாற அழைக்கப்படுகிறது. அங்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும், ஆண், பெண் மற்றும் பொதுநிலையினர், அருள்பொழிவு செய்யப்பட்டவர்கள், அருள்பணியாளர்கள் மற்றும் குருத்துவப் பணிக்கான வேட்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் இறைவனின் விருப்பத்தை அறிவதில் ஒரு பங்கு உண்டு.



# எதிர்கொள்வது

## தொடக்கப்பாடல்

இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்
ஆவலாய்த் தன் கரத்தை நீட்டி
அன்பாய் அழைக்கிறார் – 2

• இறைவனின் குலமே இயேசுவின் உள்ளமே – 2
இதய அமைதி இனிதே அடைய
இயேசு அழைக்கிறார் – 2

• கவலை மிகுந்தோரே கலங்கித் தவிப்போரே – 2
கவலை நீக்கிக் கலக்கம்
போக்கக் கடவுள் அழைக்கிறார் – 2

## தொடக்க இறைவேண்டல்

அன்புள்ள ஆண்டவரே, எங்கள் இதயங்களை உம்மிடம் அர்ப்பணித்து உம்மிடம் வருகிறோம். உமக்கும் மற்றவர்களுக்கும் செவிசாய்க்கவும். ஒத்துழைக்கவும், இணைந்து செயல்படவும் எமக்கு உதவியருளும். எங்களை ஆட்கொண்டு, உமது அன்பின் கருவிகளாக எங்களை பயன்படுத்தும். இவையாவும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## மேய்ப்புப்பணிப் பாதை

“நீங்கள் பிறருக்கு செவிகொடுத்தால், கடவுள் உங்களுக்காகத் தம் காதுகளைத் திறந்து செவிசாய்க்கிறார்” என்று புனித பீட்டர் கிறிசலோகஸ் நமக்கு நினைவூட்டுகிறார்.

இந்தச் சிந்தனை, திருஅவையானது ஒருங்கிணைந்து வாழ்வதை ஒரு கருத்தாக மட்டும் கொள்ளாமல், வாழ்க்கை முறையாகவே வாழவேண்டுமென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்புடன் ஆழமாகப் பொருந்திப்போகின்றது. ஒருங்கிணைந்து வாழும் திருஅவையானது, செவிசாய்ப்பதன் மூலம் தொடங்குகிறது. கடவுளுக்குச் செவிசாய்ப்பது, தாழ்ச்சியோடும் திறந்த மனதோடும் ஒருவருக்கொருவர் செவிசாய்ப்பதும் இதில் அடங்கும். இது சுயநேர்மை மற்றும் தனிப்பட்ட நோக்கங்களைக் கடந்து உண்மையான சமூகப் பகுத்தறிதலுக்காக நம் இதயங்களில் இடமளிப்பதை அவசியமாக்குகிறது.

திருஅவையின் ஒருங்கிணைந்து வாழ்வது என்பது, கிறிஸ்துவின் உடலின் ஒவ்வொரு உறுப்பினர் மூலமாகவும் தூய ஆவியார் பேசுகிறார் என்பதை உணர்ந்துகொள்வதாகும். சமூகப் பகுத்தறிதலைப் பயிற்சி செய்வதில் நாம் தனிப்பட்ட விருப்பங்களைத் தேடாமல், அனைவரின் நன்மைக்காகக் கடவுளின் விருப்பத்தைத் தேடி ஒன்றித்துப் பயணிக்கிறோம்.இது மரியாதை, பொறுமை மற்றும் பற்றுறுதியால் நடத்தப்படும் உரையாடலால் ஒரு உண்மையான செவிசாய்த்தல், மற்றும் கூட்டு ஒத்துழைப்புக் கலாச்சாரத்தை உருவாக்க நம்மை அழைக்கிறது.

தனிப்பட்டவகையில் கடவுளால் அருளப்பட்ட நம் ஒவ்வொருவரும், திருஅவையின் வாழ்விற்குப் பங்களிக்க அழைக்கப்படுகிறோம். நாம் நமது கொடைகளை சேவைசெய்வதில் அர்ப்பணிக்கும்போது, இறைவனின் அன்பு மற்றும் இரக்கத்தின் கருவிகளாக மாறி சமுதாயத்தை பலப்படுத்தி, ஒற்றுமையை வளர்க்கிறோம். இந்தப் பகிரப்பட்ட பயணத்தில், நமது செயல்கள் தனித்துவிடப்படவில்லை மாறாக, உலகில் ஒற்றுமை, பங்கேற்பு மற்றும் பணி ஆகியவற்றில் உயிருள்ள அடையாளமாகத் திருஅவையைக் கட்டியெழுப்பும் ஒரு மாபெரும் பணியின் ஒரு பகுதியாகும்.

# இறைவார்த்தை

## எபேசியர் 4: 11-12

அவரே சிலரைத் திருத்தூதராகவும் சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார்.

மேற்குறிப்பிட்ட இறைவார்த்தையை தியானித்து, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட திறமைகளையும் கொடைகளையும் கண்டறிய ஒருசில நிமிடம் அமைதியில் தியானியுங்கள்

# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** “நான்” என்னும் கண்ணோட்டத்தில் (அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

• திருஅவைக்கும் பரந்த சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வகையில் எனது திறமைகளையும் கொடைகளையும் பயன்படுத்தும்படி, தூய ஆவியானவர் என்னை எவ்வாறெல்லாம் தூண்டுகிறார்?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** “நீங்களும் நானும்” என்னும் கண்ணோட்டத்தில் (இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

• மற்றவர்களிடமிருந்து கேட்டறிந்தபின் எந்தக்கருத்தில் பொதுவான தன்மையைக் காண்கிறேன்? எது எனக்கு சவாலாக உள்ளது? எது உங்களை ஈர்த்தது?

(ஒன்று அல்லது இரண்டு குறிப்புகளைத் தெரிவிக்கவும்)

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 3** – ‘நாம்’ என்னும் கண்ணோட்டத்தில் (இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

• நமது திறமைகளையும், கொடைகளையும் பயன்படுத்தி, திருஅவை ஒற்றுமையுடன் வாழ்வது குறித்து தூய ஆவியானவர் நமக்கு என்ன கூறுகிறார்?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)